DINAMALAR

PAGE NO: 04 DATE: 16.12.2023

# வளர்ச்சியடைந்த இந்தியா திட்டத்திற்கு விழிப்புணர்வு சுவரொட்டி வெளியீடு

**புதுச்சேரி, டிச. 16–**

வளர்ச்சியடைந்த இந்தியா திட்டத்திற்கு மாணவர்கள் தங்களது கருத்துகளை தெரிவிப்பதற்கான விழிப்புணர்வு சுவரொட்டிகளை துணைவேந்தர் தரணிக்கரசு வெளியிட்டார்.

நாட்டின் தேசிய திட்டங்கள், முன்னுரிமைகள், இலக்குகளை உருவாக்குவதில் இளைஞர்களைத் தீவிரமாக ஈடுபடுத்துவதற்கான பிரதமர் மோடி 'வளர்ச்சியடைந்த இந்தியா @ 2047: இளைஞர்களின் குரல் என்ற திட்டத்தை அண்மையில் துவக்கி வைத்தார். அப்போது,பல்கலைக்கழகதுணைவேந்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இந்த இயக்கத்தில் பங்கேற்க தலைமை பங்காற்ற வேண்டும் என வலியுறுத்தினார்.



■ வளர்ச்சியடைந்த இந்தியா திட்டத்திற்கு மாணவர்கள் தங்களது கருத்துகளை தெரிவிப்பதற்கான தகவல்கள் அடங்கிய விழிப்புணர்வு சுவரொட்டிகளை புதுச்சேரி பல்கலைக்கழக பொறுப்பு துணைவேந்தர் தரணிக்கரசு வெளியிட்டார்.

இதனையடுத்து புதுச்சேரி பல்கலையில் மாணவர்கள் தங்கள் கருத்துகளை www.my.gov.in என்ற போர்டலில் சமர்ப்பிக்க வழிகாட்டுதல்கள் அடங்கிய சுவரொட்டியை துணைவேந்தர் தரணிக்கரசு வெளியிட்டார்.

இதில் மாணவர்கள் பங்கேற்கும் விதத்தில் அனைத்து தகவல்களும் பல்கலைக்கழக இணையதளத்தில் பிரத்யோக இணைய பக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சியடைந்த இந்தியா திட்டத்திற்காக புதுச்சேரி பல்கலைக்கழகம் பல சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிட்டுள்ளது. சிறப்பு நிபுணர்களின் உரைகள், குழு விவாதங்கள், மினி மாரத்தான், துறைகள் அளவிலான பயிலரங்கள், என்.சி.சி., என்.எஸ்.எஸ்., முகாம், கட்டுரை, விவாதம், வினாடி வினா, ஓவிய போட்டிகளும் நடத்தப்பட உள்ளன.

DINAKARAN

PAGE NO: 14 DATE: 16.12.2023

# புதுவை பல்கலைக்கழகத்தில் விக்சித் பாரத் போஸ்டர்

## துணைவேந்தர் வெளியிட்டார்



▶ புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் தரணிக்கரசு விக்சித் பாரத் போஸ்டரை வெளியிட்டார்.

புதுச்சேரி, டிச. 16: புதுச்சேரி பல்கலைக்கழகம் விக்சித் பாரத் உத்சவ் (வளர்ந்த இந்தியா) நிகழ்ச்சியின் ஒரு அங்கமாக விக்சித் பாரத் @ 2047க்கு மாணவர்கள் மற்றும் அறிஞர்களின் யோசனைகளை உருவாக்கி சமர்ப்பிப்பதில் அதிகம் பேர் பங்கேற்பதை ஊக்குவிக்க பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

பிரதமர் விக்சித் பாரத் உத்சவ் (வளர்ந்த இந்தியா) தொடக்கவிழாவின் பொது துணைவேந்தர்கள் மற்றும் ஆசிரியர்களை இந்த இயக்கத்தில் பங்கேற்பதற்காக மாணவர்களுக்கு வழிகாட்டுவதில் தலைமை பங்காற்ற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இந்நிலையில், மாணவர்கள். தங்கள் கருத்துக்களை www.mygov.in போர்ட்டலில் சமர்ப்பிக்க படிப்படியான வழிகாட்டுதல்களை வழங்குவதற்கான சுவரொட்டிகளை புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் (பொறுப்பு) தரணிக்கரசு வெளியிட்டார்.

இந்த பிரசாரத்தில் மாணவர்கள் பங்கேற்க வசதியாக அனைத்து தகவல்களையும், செயல்பாடுகளையும் வெளியிடும் வகையில் பல்கலைக்கழக இணையதளத்தில் பிரத்யேக இணையப்பக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. புதுவை பல்கலைக்கழகம் சார்பில் விக்சித் பாரத் உத்சவ் (வளர்ந்த இந்தியா) நிகழ்ச்சிக்கு பல நடவடிக்கைகளை திட்டமிட்டுள்ளது. இதில் புகழ் பெற்ற நபர்களின் அழைப்பு பேச்சுக்கள், குழு விவாதங்கள், மினி-மாரத்தான், துறை அளவிலான பயிலரங்குகள், என்சிசி, என்எஸ்எஸ் முகாம், கட்டுரை, விவாதம், வினாடி-வினா மற்றும் ஓவியப்போட்டிகள் நடத்தவும் திட்டமிட்டுள்ளது.

THE HINDU

PAGE NO: 02

DATE: 16.12.2023

# Pondicherry University plans competitions, lectures as part of Viksit Bharat@2047 campaign

**The Hindu Bureau**
PUDUCHERRY

**The campaign aims to get innovative ideas from students, press release said.**

Pondicherry University has released posters on Prime Minister Narendra Modi's 'Viksit Bharat @2047' campaign in order to sensitise and encourage students to submit suggestions and ideas on the www.mygov.in portal.

In a press release, University Vice-Chancellor (in-charge) K. Tharanikkarasu said the university had planned several activities including talks by eminent personalities, panel discussions, a mini-marathon, department-level workshops, NCC/NSS camps, quizzes and essay and painting competitions as part of the campaign.

The initiative is aimed at getting feedback in the form of innovative ideas from students, the press release said.